SRI S. PAKKIRISAMI PILLAI : மழைத் தண்ணீர் வராத காரணத்தினால் ' ஹைட்ரோ பவர் ஸ்டேஷன் ஏரியா'க்களில் கட்டுப்பாட்டுக்கு ஏற்பாடு செய்திருப்பதாக கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். ' தெர்மல் பவர் ஸ்டேஷன்களில் ' இம்மாதிரி கட்டுப்பாடு இருக்கவேண்டிய காரணம் என்ன? 'ஸ்டாக்கரிங் பீரியட்ஸ்' என்று போடுவதற்கு காரணம் என்னவென்று சொல்லமுடியுமா?

THE HON. SRI V. RAMIAH : 'தெர்மல் ஸ்டேஷன்களில்' இப்போது கட்டுப்பாடு இல்லை. ஆனால் 'ஸ்டாக்கரிங்' முறை தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கிறது. பேஸின் பிரிட்ஜ் பவர் ஸ்டேஷனில் இன்னும் சில வாரங்களில் அதிகப்படியான மின்சாரம் உற்பத்தியாகும். அப்போது இந்த 'ஸ்டாக்கரிங்' முறையை திருத்தி அமைப்பதற்கு யோசனை செய்யப் படும்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : குடிசைத் தொழிலாக இருக்கும் 'பவர் லூம்ஸ்களுக்கு' இதிலிருந்து விதி விலக்கு அளிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. SRI V. RAMAIAH : அதற்கு தனி கேள்வி வேண்டும்.

Sreepadam lands

* 641 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received any communication from the Kerala State regarding the introduction of legislation conferring permanent rights on tenants of Sreepadam lands transferred to this State after States Reorganization making them pay land revenue only; and

(*b*) if so, the steps taken by the Government thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The Government have consulted the Board of Revenue and the Board's reply is awaited.

SRI N. K. PALANISAMI : என்ன காரணத்தினால் இம்மாதிரி தாமதம் ஏற்படுகிறது என்று கனம் மந்திரி அவர்கள் சொல் வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதில் தாமதம் ஒன்றும் ஆகவில்லை. இந்த விஷயம் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

SRI S. LAZAR : ஸ்ரீ பாத நிலங்கள் என்றால் என்ன என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

MR. SPEAKER : The hon. Member may put a separate question.

SRI T. T. DANIEL : Sir, in view of the fact that these Sripadam lands belong to the ex-Rajapramuk of the erstwhile Travancore-Cochin State, may I know from the Hon. Minister whether his opinion has been got by the Kerala Government as to whether he is prepared to surrender all these Sripadam lands in favour of the cultivators?

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, the hon. Member has given the meaning of the word ' Sripadam ''.

As regards the other question, I want notice.